நாள்: 15 மார்ச் 2023

# முஸ்லிம் கலைக் கல்லூரி

திருவிதாங்கோடு

## தமிழ்த்துறை தமிழ் ஆய்வு மையம் ஒருங்கிணைக்கும் தேசிய கருத்தரங்கம்

# சான்றிதழ்

முனைவர்/ திரு/ திருமதி/ செல்வி ...தி.....அனிதா.....ஜெனிபெட்..................... அவர்கள்

திருவிதாங்கோடு முஸ்லிம் கலைக் கல்லூரி தமிழ் ஆய்வு மையத்தில் நடைபெற்ற

**"தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்"** என்னும் தேசிய கருத்தரங்கில்

...பெண்ணிய....நோக்கில்.....சு.கிருத்தானியின்... கவிதை உலகம் என்ற தலைப்பில் பங்கேற்றார்/

கட்டுரை வழங்கினார் எனப் பாராட்டி சான்றளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| லயன் Dr.H.முகம்மது அலி<br>கல்லூரி தாளாளர் | முனைவர் எட்வின் ஷீலா<br>கல்லூரி முதல்வர் | முனைவர் ஜா.ஞா.ஜோணி ஜெபமலர்<br>தமிழ்த்துறைத்தலைவர் |

# தமிழ் இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்

(தேசிய கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தமிழ்த்துறை ஆய்வு மையம்
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

பாலிகை பதிப்பகம்

Dr.J.G.JONEY JEBA MALAR,
M.A.,M.Phil.,Ph.D.
Assistant Professor
Department Of Tamil
Muslim Arts college
Thiruvithancode
K.K.Dist.-62

ISBN : 9789356 801301

37. கி.ரா. சிறுகதைகளில் மானுட விழுமியங்கள் 245
- வே. எவரெஸ்ட் மேரி

38. எட்டுத்தொகை நூல்களில் இடமும் இருப்பும் 255
- த.ஷிபினி

39. சமூக மேம்பாட்டில் மணிமேகலை 260
- சூ.மேரி ஜெனட்

40. திரிகடுகம் உணர்த்தும் அறநெறிகள் 265
- கு.ரதி

41. இளங்கோவடிகள் வகுத்த வாழ்வியல் விழுமியங்கள் 271
- முனைவர் ஆ.ஆன்றோ நிஷாந்தி

42. பெண்ணிய நோக்கில் சுகிர்தராணியின் கவிதை உலகம் 277
- டாக்டர். த. அனிதா ஆனிலெட்

# பெண்ணிய நோக்கில் சுகிர்தராணியின் கவிதை உலகம்

டாக்டர். த. அனிதா ஆனிலெட்
உதவிப்பேராசிரியர்,
முஸ்லீம் கலைக்கல்லூரி,
திருவிதாங்கோடு.

## முன்னுரை

உரிமைகள் மறுக்கப்பட்ட, வரலாற்றின் அநீதிகள் இளைக்கப்பட்டு பெண்களுக்கான குரல்களை அடையாளம் காட்டிய கருத்தாடல் தான் பெண்ணியம். அது பெண்களால் பெண்களுக்காக முன்னெடுக்கப்பட்ட குரலாகும். சுகிர்தராணியின் கவிதைகளில் பெண்ணிய கூறுகள் எவ்வாறெல்லாம் மிக தீவிரமாக வெளிப்படுகிறது என்பதை இந்தக் கட்டுரையின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

## பெண்மொழியும், கவிதைகளும்

பெண்ணியம் என்பது பெண்ணிற்கான வெளியை உருவாக்கிக் கொள்வதாகும். பெண்கள் பணிகள், சடங்குகள், குடும்பம், சமூகம், மதம், சாதி ஆகிய நிறுவனங்கள் வழியாக அடக்குமுறைக்கு உள்ளானாவர்கள். பெண்கள் எழுத வந்த பிறகுதான் மௌனங்கள் தகர்ந்து உண்மையான பெண்ணின் வாழ்வு வலியோடு பதிவாக தொடங்கிய. “1970களில் தொடங்கி இன்றுவரை எழுதிவரும் பெண் எழுத்தாளர்கள் ஆண் அதிகார

 ISBN : 9789356 801301

மையத்தை எதிர்த்து பெண்ணிய எழுத்தை தீவிரமாக பதிவு செய்து வருகின்றனர். தமக்கு எதிராக செயல்பட்டு வந்த மொழியை ஆயத்தமாக தனக்கு எதிராக காட்டப்பட்டு வந்த தனது உடலை மொழியாக சமகால பெண் எழுத்தில் பதிவு செய்வது பரவலாகி வருகின்றது."[1] இவ்வாறு பார்க்கும்போது மொழி, பாலினம், உடல், நிறுவனம், சாதி என பெண்நிலை எழுத்துக்கள் அதிகாரத்தை மிக தீவிரமாக கட்டுடைப்பதை நாம் பார்க்கலாம்.

### பெண் உடலை எழுதுதல்

சுகிர்தராணியின் கவிதைகளில் பல கவிதைகள் ஒரு சராசரி பெண்ணின் புனைவியல் மன பாவத்தை தாண்டி ஒரு சராசரி பெண்ணிற்குரிய ஆசை, பாசம், கோபம் இவைகளை பேசாமல் அந்த உணர்வுகளுக்கு மாற்றான தீவிரமான ஒரு பெண்ணை முன்நிறுத்துகிறார். பெண் என்ற உடல்ரீதியான மனஅழுத்தம் நசுக்கப்படும்போது அதில் இருந்து வெளியேறி உடலை முன்வைத்து ஆண்மேலாதிக்க குரலை மிக நுட்பமாக எதிர்த்து சுகிர்தராணியின் கவிதைகள் பேசுகின்றன. நமக்கு ஒரு கேள்வி வரலாம், பெண் தனது உடலையும் அக உணர்வையும் வெளிப்படையாக கவிதையாக்குவது முறையா என்பது பல நேரங்களில் இந்த சமூகம் பதட்டம் அடைவதையும் நம்மால் காணமுடியும். சுகிர்தாணியின் ஒரு கவிதை இப்படி தொடங்குகிறது.

பருவங்கள் வாய்த்த என்னுடல்
காலினைப் போலக் கனிந்து குவிகிறது
அதன் முன்னும் பின்னும்
கவனமாய் நெய்த ரகசிய உறுப்புகள்
மயிர்கால்கள் துலிர்த்த தோல் முழுவதும்
காம நெய்யின் உருகிய வாசனை
மலர்ந்த இடையைச் சுற்றி
வெதுவெதுப்பான புணர்கதுப்புகளும்
கவிழ்த்துப் போட்ட ஆயுத எழுத்தாய்
காமத்தின் சோழிகளும்
உடலினுள் பொதிந்து மிதக்கின்றன
இப்போது புகையின் வடிவம் கொண்டு
ஒப்பனைகள் ஏதுமற்ற தெருக்கலைஞனைப் போல
கச்சையின் முன்புற வார் அவிழ்க்கிறாய்.
பாலூட்டியவைகளை ருசித்தவாறே
அவற்றின் பெயர்ச் சொல்லவும் வெட்கிக்கிறாய்.

இனியென் ஆளுகைப் பிரதேசத்தில்
பதாகையை உயர்த்திப் பிடிக்கும்
இலிகாத ஸ்தனங்களை
விதையின் அடியிலிருந்து உரக்கப்பாடு
முலைகள் விரட்சங்களாகி வெகுகாலமாயிற்று."[2]

இந்தக் கவிதை கருத்தியல் ரீதியாக பெண் உடலை பெண் உறுப்பு சார்ந்தும், பெண்ணின் மார்புகள் சார்ந்தும் நடைமுறையில் குறுக்கின்ற வழக்கத்தை உடைத்து ஆண் மைய நுகர்வு பண்பாட்டுக்கு எதிராக பெண்ணின் காமவேட்கையை முன்நிறுத்தி பெண் விடுதலையை பேசுகின்ற முக்கியமான கவிதையாக இதனைக் கொள்ளலாம்.

இந்த உலகம் பெண் உடல்மீது தொடர்ந்து அத்துமீறல்களை கட்டமைத்திருக்கும் சூழலில் பெண்ணுக்கு ஆண் உடனான உறவு ஒற்றை தன்மையாகி இறுகிபோவதால் படுக்கையும் கல்லாகி போகிறது. ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒரு தனிமனம் உண்டு. அந்த தனி மனத்தை எந்த ஆணும் உணர்வதில்லை. அதை பற்றி யாரும் துளி அளவு கூட கவலைபடுவதில்லை. அப்படி புரிதலில்லாத ஒரு ஆணோடு பெண் கூடி வாழ்ந்தால் அவளது உணர்வு எப்படி இருக்கும் என்பதை சுகிர்தராணியின் ஒரு கவிதை மிக துல்லியமாக பதிவு செய்கிறது.

பருவமப் பெண்ணின் பசலையைப் போல
கவிழத் தொடங்கியிருந்தது இருள்
கதவடைத்து விட்டு
மெழுகுவர்த்திகளின் மஞ்சள் ஒளியில்
தனியாக அமர்ந்திருந்தேன்
அப்போது தான் தினமும் விரும்பாத
அதன் வருகை நிகழ்ந்தது
நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே
என்னை உருவி எடுத்துவிட்டு
இன்னொரு என்னை வெளிக் கெணர்ந்தது
நான் திகைக்க நினைக்கையில்
அந்தரங்கம் அச்சிடப்பட்ட புத்தகத்தையே
படித்து முடித்திருந்தேன்
என் கண்களில் ஒளிக்கற்றைகள்
முன்னறையில் உறங்குபவனின்
ஆடை நெகிழ்வுகளில் பதிந்திருந்தன
கோப்பை நிறைய வழியும் மதுவோடு
என்னுடல் மூழ்கி மிதந்தது
கூசும் வார்த்தைப் பிரயோகங்களை
சன்னமாய் சொல்லியவாறு

 ✪ ISBN : 9789356 801301

சுயப்புணர்ச்சியில் ஆழ்ந்திருந்த வேளை
பறவைகளின் சிறகோசை கேட்டதும்
என்னை என்னிடத்தில் போட்டுவிட்டு
ஓடிவிட்டது இரவுமிருகம்.[3]

## சுகிர்தராணியின் கவிதைகளில் தலித் பெண்ணியம்

சுகிர்தராணியின் கவிதைகளில் வெளிப்படும் முக்கியமான கூறுகளில் ஒன்று சமூக விமர்சனம் ஆகும். வைதீக சமயம் பிறப்பின் அடிப்படைகளில் மனிதனை பிரித்து தீண்டாமையை பேசியது. இந்திய சமூகத்தில் இது மிக முக்கியமான ஒரு சாபம் ஆகும். அதிலும் தலித்தாக பிறந்த ஒரு பெண்ணின் பிரச்சினைகள் தலித் ஆணின் பிரச்சினையைவிட கூடுதலானவை. ஒரு பெண்ணின் உடலில் கணவன் செலுத்துகின்ற வன்முறையைவிட கூடுதலான வன்முறை ஆதிக்க சமூகம் அவள்மீது செலத்துகின்ற வன்முறையாகும். இன்னொரு புறம் பொருளியல் சுரண்டல் வலுவாக இருக்கிறது. பால் ரீதியில் பார்த்தோமானால் தலித் பெண்ணின் குரல் சமூக அடித்தளத்தில் பலவீனமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. சுகிர்தராணியின் ஒரு கவிதை சுத்தம் பெருக்கல் அசுத்தம் போல் பெருக்கல் கீழ் கடைசி பெருக்கல் முதல் போன்ற சொல்லாடல்கள் மூலம் உருவாக்கி வைத்திருக்கின்ற தீண்டாமை அதற்கு எதிரான ஆவேசக் குரலை சுகிர்தராணியின் இந்தக் கவிதை பேசுகிறது.

“செத்துப் போன மாட்டைத்
தோலுரிக்கும் போது
காகம் விரட்டுவேன்
வெகுநேரம் நின்று வாங்கிய
ஊர்ச்சோற்றைத் தின்று விட்டு
சுடுசோறெனப் பெருமை பேசுவேன்
தப்பட்டை மாட்டிய அப்பா
தெருவில் எதிர்ப்படும் போது
முகம் மறைத்துக் கடந்து விடுவேன்
அப்பாவின் தொழிலும் ஆண்டு வருமானமும்
சொல்ல முடியாமல் வாத்தியாரிடம் அடி வாங்குவேன்
தோழிகளற்ற
பின்வரிசையில் அமர்ந்து
தெரியாமல் அழுவேன்
இப்போது யாரேனும் கேட்க நேர்ந்தால்
பளிச்சென்று சொல்லி விடுகிறேன்
பறச்சி என்று”[4]

## முடிவுரை

இவ்வாறாக சுகிர்தராணியின் கவிதைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் வலிகள், இரத்தமும் சதையுமான வாழ்வோவியங்கள் எல்லாம் அடர்த்தியான பெண்ணிய நோக்கிலான கவிதைகளின் வழி வெளியாகி இருப்பதை நாம் பார்க்கலாம். மட்டுமில்லாமல் பெண் என்பவள் ஆணாதிக்க சமூகத்தில் ஒடுக்கப்பட்டவள் மட்டுமின்றி, தலித் பெண்ணானவள் தலித் வாழ்வியல் சித்திரத்திற்குள்ளும் ஒடுக்கப்படுகிறாள் என்பதும் நுட்பமான முறையில் பதிவாகி உள்ளதை நாம் கவனிக்கலாம்.

## அடிக்குறிப்புகள்

1. முனைவர் அரங்க மல்லிகா, பெண்ணிய குரல் அதிர்வும் தலித் பெண்ணிய உடல்மொழியும், பக்.6
2. சுகிர் தராணி, இரவு மிருகம், பக்.25
3. சுகிர்தராணி, இரவு மிருகம், பக்.19
4. சுகிர்தராணி, இரவு மிருகம், பக்.85